மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை–திரு.C.கருப்பசாமி, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
2026 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 20 ஆம் நாள், திங்கட்கிழமை,
இ.ம.எண்.1/2026
இன்
அ.வ.எண்.196/2019
––––

ஜெயலலிதா ...மனுதார்/3 ம்பிரதிவாதி

/எதிர்/

1) பெருமாள்சாமி ...1 ம்எதிர்மனுதார்/வாதி
2) ராஜகுரு
3) ரேணுகா ...2, 3 எதிர்மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகள்

இம்மனுவானது 17.06.2026 அன்று என்முன்பு இறுதிவிசாரணைக்கு வரப்பெற்று மனுதார் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், 1 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.இராமசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 2 ம்எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.சிவராஜகோபால் அவர்கள் ஆஜராகியும், 3 ம்எதிர்மனுதாரர் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் மற்றும் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை கேட்டு இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

**1)** மனுதாரர்/3 ம்பிரதிவாதிக்கு எதிராக 23.03.2021 ல் பிறந்த எக்ஸ்பார்ட்டி ஆர்டரை ரத்து செய்ய உத்தரவாக வேண்டி இம்மனு ஆர்டர் 9 ரூல் 7 சி.பி.சி–யின் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்–**

மனுதாரர் அசல் வழக்கில் 3 ம்பிரதிவாதி ஆவார். மனுதாரருக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தை பிறந்த பின்பு அவரது கணவர் மனுதாரரை விட்டு பிரிந்து சென்றதால், மனுதாரர் தனியாக அவரது மகளை வளர்த்து வந்து,

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.07.20 17:00:43 +0530

மனுதாரரின் மகள் சென்னையில் பொறியியல் பட்டப்படிப்பு படித்து வந்ததால் அவளுக்கு உறுதுணையாக 2018 ம் ஆண்டு முதல் சென்னையில் தங்கி இருந்ததால் வழக்கறிஞர் திரு.சிவனுப்பாண்டி என்பவரிடம் வக்காலத்து கொடுத்திருந்தேன். பின்பு கொரோனா காலம் ஏற்பட்டுவிட்டதால் உரிய நேரத்தில் பதிலுரை தாக்கல் செய்ய முடியாமல் கடந்த 23.03.2021 அன்று மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த விவரம் தனது மகளின் திருமணத்திற்காக கோவில்பட்டிக்கு வந்த போது தான் தெரிந்து கொண்டதாகவும், வழக்கறிஞரிடம் தொலைபேசி எண் கொடுக்காமல் விட்டுவிட்டதால் பதிலுரை தாக்கல் செய்ய விட்டுபோய்விட்டது என்றும், 1 ம்பிரதிவாதி மனுதாரரின் அம்மாவிற்கு தம்பி முறை வேண்டும், 2 ம்பிரதிவாதி சித்தி முறை என்றும், 2 ம்பிரதிவாதியும் வழக்கில் ஆஜராகாமல் எக்ஸ்பார்ட்டி ஆகியுள்ளார். மனுதாரரின் தாயார் கனகம்மாள் வயோதிகம் காரணமாக மனுதாரருடன் இருந்து வருகிறார். அவர் மனுதாரரின் தகப்பன் வழி சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யக்கோரி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.101/2015 தாக்கல் செய்து நிலுவையில் இருந்த போது 16.06.2015 ம் தேதி மனுதாரர், அவரது தாயார், சகோதரிகளுடன் தற்போதைய திருவேங்கடம் வட்டம், குருவிகுளம் பஞ்சாயத்து ஆலங்குளத்தில் உள்ள மனுதாரின் தயாரின் தகப்பன் வழி சொத்துக்களின் பாகங்களை உரிமை கோரக்கூடாது என்றும், அதற்கு பதில் இவ்வழக்கிடை தபசில் சொத்துக்களை பூர்வீக சொத்துக்கள் போல அடைந்துகொள்ள வேண்டும் என்று சில பெரியவர்கள் முன்பு வாய்மொழி Exchange செய்து கொண்டோம். மனுதாரர், கந்தசாமி நாயக்கருக்கு எதிராக கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.174/2014 ஐ மனுதாரர் தொடர்ந்து நடத்தக்கூடாது என்று கேட்டுக்கொண்டார். அதனை நிரூபணம் செய்வதற்காக 23.03.2021 ல்

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.20 17:00:50 +0530

மனுதாரருக்கு எதிராக பிறந்த எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**<u>3) 1ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

மனுதாரர் அபிடவிட்டில் பாரா 3ல் கூறிய உறவுமுறையை உண்மை என ஒப்புக்கொண்டும், இதர சங்கதிகளை மறுத்துரைத்தும், கனகம்மாள் அவரது தகப்பன் வழி சொத்துக்களை பாகப்பிரிவினை செய்யக்கோரி சங்கரன்கோவில் சார்பு நீதிமன்ற அ.வ.எண்.101/2015 தாக்கல் செய்து நிலுவையில் இருந்த போது பெரியவர்கள் முன்பு 16.06.2015ல் ஒரு வாய்மொழி Exchange செய்து கொண்டதாக கூறிய சங்கதிகளை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், கந்தசாமிநாயக்கருக்கு எதிராக மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அ.வ.எண்.174/2014 ஐ மனுதாரர் தொடர்ந்து நடத்தக்கூடாது என்று கேட்டுக்கொண்ட சங்கதிகள் எதுவும் 1ம்எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும், 23.03.2021 முதல் 15.03.2026 வரை மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய ஒவ்வொரு நாளும் ஏற்பட்ட காலதாமதத்திற்கான உண்மையான காரணத்தை மனுவில் சொல்லவில்லை என்றும், அ.வ.எண்.174/2014ன் தற்போதைய நிலை என்ன என்பதையும், அதனை சரி செய்ய என்ன நடவடிக்கை எடுத்தார் என்பது குறித்தும் மனுவில் எதுவும் குறிப்பிடவில்லை.

**<u>4) 2ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்–</u>**

வாதிக்கு தபசில் சொத்தினை மோசடியாக கிரையம் கொடுத்தவர் இந்த வழக்கின் 3ம்பிரதிவாதி. மனுதாரர் 22.01.2020ல் வழக்கறிஞர் மூலம் வழக்கில் வக்காலத்து தாக்கல் செய்துவிட்டு ஒரு வருடத்தில் மேல் ரிட்டன் ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யாமல் காலம் கடத்தி 23.03.2021ல் எக்ஸ்பார்ட்டி ஆகிவிட்டார். தற்போது வழக்கு வாதுரைக்காக வந்தவுடன் வாதியின்

KARUPPASAMY

Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.20 17:00:56 +0530

தூண்டுதலின் பேரில் கூட்டு சேர்ந்து கொண்டு வழக்கினை நாட்கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்துரைத்தும், வாதியின் பிராது சங்கதிகளை அனுசரித்து ரிட்டன் ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்துள்ளார். தபசில் சொத்தை மோசடியாக கிரையம் கொடுத்துள்ள நிலையில் கவுண்டர் கிளைம் கோருவதும், கோவில்பட்டி கோட்டாட்சியர் பிறப்பித்த உத்தரவு செல்லாது என கோருவதும் செல்லத்தக்கதல்ல என்றும், ஆகவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**<u>5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை–</u>**

இம்மனுவில் கோரியுள்ள பரிகாரமானது மனுதாரர்/3 ம்பிரதிவாதிக்கு கிடைக்கக்கூடியதா?

**<u>6) நீதிமன்ற பரிசீலனை–</u>**

**6(1)** மனுதாரர்/3 ம்பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்து, வழக்கானது வாதி தரப்பு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வந்த போது, இம்மனுதாரர் அசல் வழக்கில் வழக்கறிஞர் மூலம் முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மனுதாரருக்கு எதிராக 23.03.2021 ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு காரணமாக மனுதாரர் அவரது மகளுடன் சென்னையில் வசித்து வந்து, மகளின் திருமணத்திற்காக கோவில்பட்டிக்கு வந்த போது தான் ஷை விவரம் தெரிய வந்ததாகவும், சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.101/2015 நிலுவையில் இருந்த போது 16.06.2015 ம் தேதி வாய்மொழியாக Exchange செய்துகொண்டதாகவும், கந்தசாமி நாயக்கருக்கு எதிராக அ.வ.எண்.174/2014 ஐ மனுதாரர் தெடர்ந்து

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.20 17:01:02 +0530

நடத்தக்கூடாது என்று கேட்டுக்கொண்டதாகவும், ஷை விவரங்களை நிரூபணம் செய்ய வேண்டி இருப்பதால் 23.03.2021ல் மனுதாரருக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்.

**6(2)** 1ம்எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில் மனுவில் கூறிய உறவுமுறையை உண்மை என ஒப்புக்கொண்டும், மனுதாரர் வாய்மொழி Exchange செய்து கொண்டதாக கூறும் சங்கதிகளை நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், 23.03.2021 முதல் 15.03.2026 வரை மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய ஒவ்வொரு நாளும் ஏற்பட்ட காலதாமதத்திற்கான காரணத்தை மனுவில் சொல்லவில்லை என்றும், அ.வ.எண்.174/2014 வழக்கின் தற்போதைய நிலை என்ன என்பதையும், அதனை சரி செய்ய மனுதாரர் என்ன நடவடிக்கை எடுத்தார் என்பது குறித்தும் மனுவில் குறிப்பிடவில்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**6(3)** 2ம்எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில் மனுதாரர் 22.01.2020ல் வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்துவிட்டு ஒரு வருடத்திற்கு மேல் ரிட்டன் ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்யாமல் காலம் கடத்தி வந்து, வழக்கு வாதுரைக்காக வந்த பின்னர் வாதியின் தூண்டுதலின் பேரில் வழக்கினை நாட்கடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் கவுண்டர் கிளைமில் கோருவது சட்டப்படி செல்லத்தக்கதில்லை என்றும், மனுவை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

**6(4)** இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு முதல்விசாரணையில் இம்மனுதாரர்/3ம்பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் 22.01.2020ம் தேதி முன்னிலையாகி எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால்

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.20 17:01:08 +0530

23.03.2021ம் தேதி இம்மனுதாரர்/3ம்பிரதிவாதி ஒருதலைபட்சமாக்கப்பட்டு, பின்னர் வழக்கில் எழுவினா வனையப்பட்டும், வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், வா.சா.1 குறுக்குவிசாரணையின் போது பி.சா.ஆ.1, எக்ஸ்.1 ஆவணங்கள் குறியீடு செய்து குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டு, மேலும் வாதி தரப்பில் வா.சா.2, வா.சா.3 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளது. 1ம்பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்து குறுக்குவிசாரணை முடிக்கப்பட்டு, வாதி தரப்பு வாதுரைக்காக 25.02.2026, 05.03.2026, 16.03.2026ம் தேதி போடப்பட்டுள்ள நிலையில் இம்மனுதாரருக்கு எதிராக 23.03.2021ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து, அதற்கு காரணமாக கொரோனா காலம் ஏற்பட்டதாகவும், தனது மகளுடன் சென்னையில் வசித்து வந்ததால் உரிய நேரத்தில் பதிலுரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று கூறியுள்ளார். சங்கரன்கோவில் சார்பு நீதிமன்றம் அ.வ.எண்.101/2015 வழக்கு நிலுவையில் உள்ள போது தபசில் சொத்துக்கள் சம்பந்தமாக வாய்மொழியாக Exchange செய்து கொண்டதாகவும், அ.வ.எண்.174/2014ஐ தொடர்ந்து நடத்தக்கூடாது என்று கேட்டுக்கொண்டதாகவும், அதனை கனம் நீதிமன்றத்தில் நிரூபணம் செய்வதற்காக மனுதாரருக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய கோரியுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய ஏற்பட்ட காலதாமதத்திற்கான ஒவ்வொரு நாளுக்கும் காரணம் கூறாமல் வாதியின் தூண்டுதலின் பேரில் வழக்கினை நாட்கடத்த வேண்டி மனு தாக்கல் செய்திருப்பதாக எதிர்கட்சி செய்துள்ளார். அசல் வழக்கானது 2019ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, வாதி தரப்பு வாதுரைக்காக இருந்து வருவதாலும், 1மஎதிர்மனுதாரர்/வாதிக்கு அசல்

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.20 17:01:14 +0530

வழக்கில் ஏற்பட்ட காலதாமத்தினை கருத்தில்கொண்டும், அசல் வழக்கு 7 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வழக்கு என்பதாலும், மனுதாரர் கவுண்டர் கிளைமுடன் மனு தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பது தான் உகந்தது என்று முடிவு செய்து, மனுதாரர் தூத்துக்குடி மாவட்ட சமரச மையத்திற்கு ரூ.2,500/– செலவுத்தொகையாகவும், அசல் வழக்கில் 1ம்எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்படுத்திய காலதாமதத்திற்கு செலவுத்தொகை ரூ.2,500/–ம் எதிர்வரும் 20.08.2026ம் தேதிக்குள் செலுத்தி குறிப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் பட்சத்தில் மனுதாரரின் மனு அனுமதிக்கப்படும். தவறினால் மனுதாரரின் மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.

**7) இறுதியாக,** மனுதாரர் தூத்துக்குடி மாவட்ட சமரச மையத்திற்கு ரூ.2,500/– செலவுத்தொகையாகவும், அசல் வழக்கின் 1ம்எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத்தொகை ரூ.2,500/–ம் எதிர்வரும் 20.08.2026ம் தேதிக்குள் செலுத்தி குறிப்பாணையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் பட்சத்தில் மனுதாரரின் மனு அனுமதிக்கப்படும். தவறினால் மனுதாரரின் மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும் என்று கட்டளையிட்டு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 20.07.2026 என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARUPPASAMY Digitally signed by KARUPPASAMY Date: 2026.07.20 17:01:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள்–இல்லை.
எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள்,
சான்றாவணங்கள்– இல்லை.

KARUPPASAMY
Digitally signed by KARUPPASAMY
Date: 2026.07.20 17:01:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி.

மா.உ.நீ., கோவில்பட்டி.
இ.ம.எண்.1/2026
இன்
அ.வ.எண்.196/2019
வரைவு/நேரிய/ உத்தரவு
நாள்–20.07.2026